நாள்:  225                                                                 நாள்:03.04.2018

திருநெல்வேலி பாளையங்கோட்டை வட்டம் ரெட்டியார்பட்டியில் ISO தரச்சான்று மற்றும் மாநில விருது பெற்ற அங்கன்வாடி மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

------------------------

திருநெல்வேலி பாளையங்கோட்டை வட்டம் ரெட்டியார்பட்டியில் உள்ள அங்கன் வாடி மையத்தில் சுவர் சித்திரம், டீவி மூலம் கல்வி ஒளிபரப்பு, செயல்விளக்கம் மூலம் கல்விமுறை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுக்காக ISO தரச்சான்று மற்றும் மாநில விருது வழங்கபட்டுள்ளது. இம் மையத்தினை இன்று (3.04.2018) மாவட்டஆட்சித்தலைவர் திரு சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.,அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்படும் சத்துணவு கூடத்தினை பார்வையிட்டார்கள்,தொடர்ந்து கர்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 5 நபர்களுக்கு ஒரு வாரத்திற்கு தேவையான சத்து மாவுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினர். மேலும் அங்கன்வாடி மைய வளாக பகுதியில் கீரை மற்றும் காய்கறி செடிகளை வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அலுவலரிடம் தெரிவித்தார். தொடர்ந்து அருகில் உள்ள கிராம நூலகம், பிறப்பு இறப்பு பதிவு அலுவலகம் ஆகியவற்றையும் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்ட மாவட்ட திட்ட அலுவலர் திருமதி ஜெயசூர்யா, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி பர்வதராணி, பாளை வட்டாட்சியர் திரு கந்தசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி ஆறுமுகக்கனி ,திரு.பாலசுப்பிரமணி, குழந்தைகள் வளர்ச்சி திட்ட மேற்பார்வையாளர் திருமதி மினலோசினி, அங்கன் வாடி பணியாளர் திருமதி முருகசெல்வி ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி